செ.வெ.எண். 217 நாள் 13.03.11

# செய்தி வெளியீடு

## தனியார் மற்றும் பொது இடங்களில் தமிழ்நாடு திறந்தவெளிகள் (அழகை சீர்குலைத்தல்) சட்டம் 1959

### (அ) பொது இடங்கள்

அரசு வளாகங்களிலுள்ள கட்டிடங்களில், சுவரில் எழுதுதல், சுவரொட்டிகள் அல்லது காகிதங்கள் ஒட்டுதல் அல்லது ஏனைய பிற வடிவில் அழகை சீர்குலைத்தல் அல்லது கட் அவுட்கள், விளம்பர பலகைகள், பதாகைகள், கொடிகள் போன்றவை வைக்க அனுமதிக்கப்படமாட்டது.

(i) 1959 ஆம் ஆண்டு தனியார் மற்றும் பொது இடங்களில் தமிழ்நாடு திறந்தவெளிகள் (அழகை சீர்குலைத்தல்) சட்டம், பிரிவு 4 (அ) வின் படி மாநகர காவல் ஆணையர்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் (பிற மாநகராட்சிகள்) மாநகரங்களிலும், வரையறை செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் காலஅளவிற்கும் யாதொரு சிறப்பு நிகழ்வின் போது அனுமதிக்கப்பட்ட இடங்களில் தட்டிகள் மற்றும் கொடி கம்பங்கள் வைக்க அனுமதி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(ii) "உள்ளூர் பகுதி" என்பது மாநகராட்சி அல்லது நகராட்சி அல்லது நகர பஞ்சாயத்து என வரையறை செய்யப்பட்டுள்ளது.

தட்டி மற்றும் விளம்பர பலகைகள் வைக்க அனுமதி வழங்க அதிகாரம் பெற்ற அலுவலர், இடம், காலக்கெடு, விளம்பரப் பலகையின் அளவு மற்றும் பொது நலனுக்கு குந்தகமில்லாத நிபந்தனைகளை குறிப்பிட்டு அனுமதி வழங்கலாம். சுவற்றில் எழுதுதல் அனுமதிக்கப்படமாட்டாது.

### (ஆ) தனியார் இடங்கள்

(i) 1959 ஆம் ஆண்டு தனியார் மற்றும் பொது இடங்களில் தமிழ்நாடு திறந்தவெளிகள் (அழகை சீர்குலைத்தல்) சட்டம், (சட்டப் பிரிவு 2–இன்படி) ப பொதுமக்களின் பார்வையில் படும் இடங்கள் என்பன தனியருக்கு சொந்தமான

(ii) எனவே, பொது இடங்களில் சுவர்களில் வரைதல், சுவரொட்டி ஒட்டுதல் போன்றவற்றுக்கு வீட்டு உரிமையாளரின் இசைவுடன் கூட அனுமதியில்லை.

(iii) உள்ளூர் சட்டத்தின்படி வெளிப்படையாக அனுமதி வழங்கப்படாதபோது எந்தவொரு சூழ்நிலையிலும் சொத்தின் உரிமையாளரின் ஒப்புதலோடு கூட, அனுமதிக்கப்படாத செயல்களை செய்யக்கூடாது என இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

1. சட்டப்படி **உள்ளூர் பகுதி** என்பது நகராட்சி சட்டங்களின்படி மாநகராட்சி அல்லது நகராட்சி அல்லது நகரபஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதி என வரையறை செய்யப்பட்டுள்ளது. ஏனவே, மாநகராட்சி, நகராட்சி, நகரபஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதிகளில் சுவர்களில் வரைதல், போஸ்டர்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் ஒட்டுதல் ஆகியவை தனியார் இடங்களிலும் அனுமதிக்கப்படமாட்டாது.
2. எனினும் மேற்கண்ட சட்டத்தில் கிராமப்பகுதிகளைப் பற்றி குறிப்பிடப்படவில்லை. ஏனவே, கிராமப்புறங்களை பொறுத்தவரை உரிமையாளரின் எழுத்து மூலமான அனுமதியோடு சுவர்களில் எழுதுதல், வரைதல், சுவரொட்டிகள் ஒட்டுதல், கட்அவுட் வைத்தல், கொடிகம்பங்கள் ஆகியவை உள்ளூர் விதிகளின்படி குறிப்பிட்ட காலத்திற்கு பிறருக்கு இடையூறு இல்லாத வகையில் அனுமதிக்கப்டுகிறது.

## (I) உடைமைகளின் சீர்குலைத்தலை அகற்றுதல்

எந்த ஒரு அரசியல் கட்சியோ, குழுவோ, வேட்பாளரோ, தனியரோ உடைமைளை சீர்குலைக்கும் செயலில் சட்டவிரோதமாக ஈடுபடுவாராயின், தவறு செய்பவர் மீது தேர்தல் நடத்தும் அதிகாரி / மாவட்ட தேர்தல் அதிகாரி சுவர் விளம்பரங்களை நீக்க அறிவிப்பு அளிக்க வேண்டும்.

அரசியல் கட்சி / அமைப்பு / வேட்பாளர் / தனி நபர், உடைமைகளின் அறிவிப்பில் கண்ட விளம்பரங்களை உடனடியாக நீக்கவில்லை என்றால், அத்தகைய விளம்பரங்களை நீக்குவதற்கு மாவட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கலாம். இதற்கு ஏற்பட்ட செலவுத் தொகையை, சம்பந்தப்பட்ட நபரிடமிருந்து வசூலிக்க வேண்டும்.

மேலும், இத்தொகையை சம்மந்தப்பட்ட வேட்பாளரின் தேர்தல் செலவு கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். சம்மந்தப்பட்ட சட்டத்தின் (ஏதேனும் உடைமைகளின் அழகை சீர்குலைப்பதை தடுக்கும் சட்டத்தின் அல்லது பிறருடைய உடைமைகளை வேண்டுமென்றே சீர்குலைத்ததற்காக, பொதுச் சட்டத்தின் விதிமுறைகளின்கீழ்) விதிமுறைகளின்கீழ் சட்டத்தை மீறியவர் மீது வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

*******

13/3/2011     13.3.11     13/3/11

Addl. CEO (PA)



வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை